(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 338.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 பெப்புருவரி 05, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2566/ '12

1\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பெந்தர ஆற்றின் இடது கரை மற்றும் வலது கரைக் கருத்திட்டங்களுக்குச் சொந்தமான பெருமளவிலான வயற்காணிகள் பாழடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) "பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி வயற்காணிகளில் மீண்டும் பயிரிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மீள் பயிரிடும் வேலைத் திட்டத்தின் பின்னர் மேற்படி வயற்காணிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பெந்தர ஆற்றின் ஊடாக பெருக்கெடுக்கும் கடல் நீர் காரணமாக மேற்படி வயற்காணிகள் அழிந்து வருவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) கடல் நீர் வயற்காணிகளுக்கு பெருக்கெடுப்பதைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2858/ '12

2\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) விளையாட்டு மற்றும் அது தொடர்புடைய செயற்பாடுகளை ஒளிபரப்புவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஊடக நிறுவனமொன்று இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அத்தகைய நிறுவனத்தின் பெயரையும்;

(iii) சிரச, சுவர்ணவாஹினிய, தெரண, ஐ.ரி.என்., ரூபவாஹினி போன்ற தொலைக்காட்சி நிலையங்கள், விளையாட்டுக்களை ஒளிபரப்புவதற்கான உரிமைகளுக்கு விண்ணப்பித்துள்ளனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) எப்போது கூட்டிணைக்கப்பட்டது;

(ii) 2012.06.01 திகதியில் உள்ளவாறு பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் தற்போதுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் பெயர்கள் யாவை;

(iii) கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) அரசாங்க ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளதா;

(iv) ஆமெனில், அவ் ஒப்பந்தங்கள் யாவை

என்பதை அவர் கூறுவாரா?

(இ) (i) அரச நிறுவனங்களிடமிருந்து கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) பெற்றுக்கொண்ட விளம்பரங்கள் யாவை;

(ii) அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றினால் கால்டன் விளையாட்டு அலைவரிசையில் வர்த்தக விளம்பரங்களை ஒளிபரப்புதவதற்கு CSN நிறுவனம் ஆரம்பம் முதல் இற்றைவரை மாதாந்தம் மேற்கொண்டுள்ள செலவினங்கள் யாவை;

(iii) கால்டன் விளையாட்டு வலையமைப்பு (CSN) விளம்பரம் செய்யும் 10 பாரிய அரச நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

2930/ '12

3.

கௌரவ புத்திக பதிரண,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் உடவலவ அலுவலகத்திற்கு 2010 ஆம் ஆண்டில் 26 ஆசனங்களைக் கொண்ட பஸ் வண்டியொன்றும் குரூ கெப் வண்டியொன்றும் கொள்வனவு செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வாகனத்தையும் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) இதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனின், ஒவ்வொரு வாகனத்தையும் கொள்வனவு செய்வதற்காக திறைசேரி அங்கீகரித்த பணத் தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) இரண்டு வாகனங்களினதும் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட பணத் தொகையை விஞ்சியிருப்பின், மேலதிக பணத் தொகையை செலவிடுவதற்காக நிதி ஏற்பாடுகள் பெறப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல்வாங்கல் தொடர்பில் மோசடி இடம்பெற்றிருப்பின் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3428/ '13

4\.
கௌரவ பி. ஹரிசன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயிர்ச் சேதத்திற்கு உள்ளான வயல்களின் உரிமையாளர்களான விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் போது பின்பற்றப்படும் வழி முறைகள் யாவையென்பதையும்;

(ii) நட்டஈடு பெறுவதற்கு சேதமடைந்த விளைநிலங்கள் சார்பில் விவசாயிகளிடம் நிரந்தர உரிமப்பத்திரம் காணப்பட வேண்டுமா என்பதையும்;

(iii) உரிமப்பத்திரமற்ற விளைநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் சார்பில் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், உரிமப்பத்திரமற்ற, பயிர்ச் சேதம் ஏற்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3621/ '13

5\.
கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சர்வதேச விளையாட்டரங்கு மைதானமொன்றான மொரட்டுவ த சொய்ஸா விளையாட்டு அரங்கில் இறுதியாக சர்வதேச விளையாட்டுப் போட்டியொன்று நடத்தப்பட்ட வருடம் மற்றும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டரங்கு சிதைவடையும் நிலைமைக்கு உள்ளாவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அதன் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுள்ள தரப்பு யாதென்பதையும்;

(iii) அதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனம் அல்லது தரப்பு யாதென்பதையும்;

(v) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4097/ '13

6\.
கௌரவ அனுர திஸாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை நகரசபை ஐக்கிய அமெரிக்காவுடன் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உடன்படிக்கையின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறான உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஏதாவதொரு வெளிநாட்டுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நகர சபையொன்றுக்கு அதிகாரம் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2580/ '12

7\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டின் தொழிலற்ற இளம் சந்ததியினருக்காக பிரதேச மட்டத்தில் கைத்தொழிற்சாலைகளை தாபிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பிரதேச செயலாளர் மட்டத்தில் அத்தகைய கைத்தொழிற் சாலைகளைத் தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற திகதி யாது என்பதையும்;

(iii) அந்நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2886/ '12

8\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டிற்கு எதிராகத் தொடர்ந்து நடாத்தப்பட்ட சர்வதேச ஊடகங்களின் வெளிப்படையான எதிர்ப் பிரசாரங்களினால் அண்மைக் காலத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு தரம் சங்கடமான நிலைமைகள் ஏற்பட்டனவா என்பதையும்;

(ii) 2010, 2011 மற்றும் 2012 (பெப்புருவரி - மார்ச்சு) ஆகிய வருடங்களில் அத்தகைய பிரசாரங்களை ஐக்கிய இராச்சியத்தில் உள்ள 'சனல் 4' ஊடக நிறுவனம் மேற்கொண்டிருந்ததா என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டில் கௌரவ மஹிந்த சமரசிங்க அவர்கள் குறிப்பிட்டவாறு இவ்விடயம் தொடர்பாக ஐக்கிய இராச்சியத்தில் உள்ள 'சனல் 4' ஊடக நிறுவனத்திற்கு எதிராக ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iv) இலங்கை தொடர்பாக 'சனல் 4' ஊடக நிறுவனத்தின் குறித்த சில ஒளிபரப்பு பற்றி கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கப்பாடு பற்றிய சனாதிபதி ஆணைக்குழு (LLRC) கவனம் செலுத்தியுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 'சனல் 4' ஊடக நிறுவனத்தின் மேற்சொன்ன எதிர்ப் பிரசாரம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீர்செய்தல் நடவடிக்கைகளையும்;

(ii) இன்றேல் அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமைக்கான காரணங்களையும்;

(iii) உலகளாவிய ரீதியில் இலங்கைக்கு எதிரான ஊடகப் பிரசாரங்களைக் கூர்ந்து அவதானிக்கும் ஆளை அல்லது தாபனத்தையும்;

(iv) இலங்கைக்கு எதிராக இத்தகைய வேறு ஏதாவது பிரசாரம் உள்ளதா என்பதையும்;

(v) 'சனல் 4' ஒளிபரப்பின் பரிசீலனை தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கப்பாடு தொடர்பான சனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகளையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

2990/ '12

9.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கேகாலை மாவட்டத்தின் கித்துள்கல களணிவெளி ஒதுக்கத்திற்கு சொந்தமான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற மாகன்தூவ ஒதுக்கத்திற்கு குறுக்காக கித்துள்கலவில் இருந்து பள்ளேபாகே வரை வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி வீதி நிர்மாணிக்கப்படுவதால் கடுமையான சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதாக சுற்றாடலியலாளர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்கள் என்பதையும்;

(iii) ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தை தடுப்பதற்காக மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு பிரதேச வாசிகள் கோரிக்கை விடுக்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாகன்தூவ ஒதுக்கத்திற்கு குறுக்காக மேலே குறிப்பிட்ட வீதியை நிர்மாணிக்க சட்டபூர்வமான அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தையும் அதனோடு சம்பந்தப்பட்ட மக்கள் எதிர்ப்பையும் கருத்திற்கொண்டு மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3430/ '13

10.

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள ஈரூடக வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றில் இலங்கைக்கே உரித்தான ஈரூடக வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது அழிவடைந்துள்ள இலங்கைக்கே உரித்தான ஈரூடக வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்குஅறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டுக்கே உரித்தான நன்னீர் மீன் இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றில் தற்போது அழிவடைந்துள்ள இனங்கள் யாவை என்பதையும்;

(iii) இந்நாட்டுக்கே உரித்தான நன்னீர் மீன் இனங்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்

அவர்குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நாட்டுக்கே உரித்தான ஊர்வன இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றில் தற்போது அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இனங்கள் யாவை என்தையும்;

(iii) மேற்படி ஊர்வன இனங்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3901/ '13

11\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஏப்பிரல் 03 ஆம் திகதியன்று, கிளிநொச்சியில் அமைந்துள்ள "உதயன்" பத்திரிகை நிறுவனத்தை தாக்கியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) மேற்படி தாக்குதல் காரணமாக காயமடைந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) "உதயன்" அலுவலகத்திற்கும் உபகரணங்களுக்கும் ஏற்பட்ட இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் "உதயன்" பத்திரிகைகளை விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு தீ வைக்கப்பட்டமை தொடர்பாக பொலிசாருக்கு முறைபாடுகள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி முறைபாடுகள் பற்றி புலனாய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2663/ '12

12\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு "தேசிய கலாசார ஒழுங்கு முறையாக்கல் சபையொன்று" நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் குறிப்பிட்ட தேசிய கலாசார ஒழுங்கு முறையாக்கல் சபை நியமிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3228/12

13\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தொடர்பாக,

(i) 2013-2014 ஆண்டு காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) இந் நிறுவனத்தில் வேலை செய்கின்ற ஆட்களின் எண்ணிக்கையும்;

(iii) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(iv) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(v) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3417/ '13

14.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை உள்ளிட்ட உலகின் ஏனைய நாடுகளில் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்ற மோட்டார் வாகன உற்பத்தி மற்றும் பயன்பாடு ஆகிய துறை தொடர்பாக மக்கள் மத்தியில் மனப்பாங்கு ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்தவதற்கு உதவியாக அமைகின்ற கல்விச் செயற்பாடொன்றை பாடசாலை மட்டத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்கமைய மோட்டார் வாகன தொழில்நுட்ப அறிவை பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் மேம்படுத்துவதற்காக மோட்டார் வாகன தொழில்நுட்ப பாடத்தை பாடசாலைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

3821/ '13

15.

கௌரவ பி. ஹரிசன்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி "எச்" வலயத்தின் ஆரம்பத் திட்டத்தின் படி பொது விளையாட்டரங்குகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வலயத்தில் பொது விளையாட்டரங்குகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் அந்த ஒவ்வொரு இடத்தினதும் நிலப்பரப்பளவு தொகுதி அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு விளையாட்டரங்கிற்கும் உரித்தான காணிகளில் இருக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்கள் அந்த இடங்களில் குடியிருப்பதற்கு வந்த வருடங்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) அந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கு வேறு சட்ட ரீதியான காணிகள் வழங்கப்பட்டிருப்பின் அவ்வாறு காணிகளைப் பெற்றவர்களின் பெயர்கள், தொகுதி அடிப்படையில் யாவை என்பதையும்;

(v) இவர்களுக்கு நீர் மற்றும் மின்சாரம் பெற்றுக்கொள்ள மகாவலி அதிகார சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

(vi) அவ்வாறெனின் அது தொடர்பாக அழுத்தங்களை பிரயோகித்தவர்கள் யார் என்பதையும்;

(vii) மேலே குறிப்பிடப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பாளர்களை விளையாட்டரங்கிற்குரிய காணிகளிலிருந்து அகற்ற மகாவலி அதிகாரசபை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2014, பெப்புருவரி மாதம் 7ஆம் திகதி, வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

சுகாதார அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 ஓகத்து மாதம் 08 ஆம் திகதிய 1770/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

சுகாதார அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 நவெம்பர் மாதம் 08 ஆம் திகதிய 1783/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

சுகாதார அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதிய 1797/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் 63(2)(ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 நவம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1837/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

13.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

ஏர்ல் குணசேகர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம விகாரயே செயற்சாதனைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

மினுவாங்கொட சிங்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

மைத்திரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

யூ.எல்.எம். பாறூக் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

விக்டர் அந்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

சுவாபிமானி தஹம் சவிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப் பணியாளர்களின் ஒன்றியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.